கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். துரை. கி.சரவணன், அ.ஞானமுத்து உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழகத்தின் பவள விழாவையொட்டி இல்லந்தோறும் கழகக் கொடியேற்றி

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் மகிழ்ச்சியாக கொண்டாடுவோம்!

மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், செப். 11-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 09.09.2024, திங்கள்கிழமை மாலை 03.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி தி.மு.க. அலுவலகத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றிட நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.சக்திவேல், சுதாசம்பத், மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய வி.சிவக்குமார், திருமுட்டம் தெற்கு தங்க.ஆனந்தன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள் பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்று பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றிய பொருளாளர் டி.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மூ.இளையராஜா தலைமை செயற்குழு உறுப்பினர்கள்அ.முத்துசாமி, வ.ஞானசேகரன், வே.விக்கிரமன் பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், ச.கல்யாணசுந்தரம், வி.பி.பாலு, எஸ்பி.கண்ணன், மு.வெற்றிவேல், என்டி.கணேசன், பா.கோதண்டபாணி, இரா.மஞ்சு, பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், கெங்கைகொண்டான் சி.பக்தவச்சலம், அண்ணாமலை நகர் அ.க. பழனி, மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்பு சந்தியநாராயணன், மகளிர் தொண்டரணி எஸ்.மனோரஞ்சிதம், வழக்கறிஞரணி பி.அருள்ஜோதி, நெசவாளர் அணி கி.தண்டபாணி, பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், மீனவரணி வி.செல்வபாரதி, விவசாயத் தொழிலாளர் அணி எம்.ராமசாமி, வர்த்தகர் அணி ரெங்கநாதன், தொண்டர் அணி அரமுது, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தாணூர் சிவக்கொழுந்து, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, தொழுசி பி.பழனிவேல் மற்றும் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞரணி, தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணையேற்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல்படி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழிக்காட்டுதல்படி நடைபெறும் மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை, கடந்த மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானித்ததை விடவும் சிறப்பாக மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட்டது. மாவட்டச் செயலாளர் அமைச்சர் அவர்கள் பாராட்டும்படி நடத்திய அனைத்து நிர்வாகிகளுக்கும் வாழ்த்தினையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் சிறப்பாக இளம் இதயங்களில் இயக்க உணர்வை உருவாக்க, உறுதிப்படுத்திட வருகின்ற செப்17 நம் கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. பவள விழா நிகழ்வுகளாக மாநகரம், ஒன்றியம், நகரம், பேரூர், பகுதி, ஊராட்சி, வார்டு, வட்டக் கிளைக்கழகத்திலும் கொடியேற்றி, தெருமுனைப் பிரச்சாரங்கள், இளையவர்களுக்கான போட்டிகள் நடத்தி, பல்வகை நலத்திட்ட உதவிகளை செய்திட வேண்டும் என்றும் கழக சாதனைகளை சுவரெழுத்து விளம்பரங்களாக அனைத்து பகுதிகளிலும் செய்வது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

படித்த திறன்மிகு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கில், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திட முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் 2021 ஜீலை மாதம் முதலீட்டாளர்களின் “முதல் முகவரி தமிழ்நாடு” என்ற பெயரில் முதல் முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையில் நடத்தினார். 35 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முடிவானது. ரூ 17 ஆயிரம் கோடி முதலீடுகள் பெறப்பட்டது. தொடந்து கோவையில் மாநாடு ரூ 1.90 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு, சுமார் 2.80 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் அமைந்தது. மேலும் ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், ஸ்பெயின், மலேசியா, ஜப்பான் தொடர்ந்து அமெரிக்கா, ஜெர்மன், பிரான்சு, உட்பட 35க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து, செயற்கறிய செயல்களை செய்திடும் சாதனைத் திலகமான நம் தலைவர் முதல்வர் தளபதியின் அழைப்பை ஏற்று பெரும் நிறுவனங்களின் நிர்வாகிகள் சென்னையில் முதல்வர் நடத்திய ஜனவரி 7,8 தேதிகளிலான உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். இதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டு களில் சுமார் ரூ 9.74 லட்சம் கோடி முதலீடுகளும் சுமார் 31 லட்சம் வேலைவாய்ப்புகளும் உருவாகியுள்ளன. மீண்டும் தற்போது அமெரிக்கா சென்று மிகப்பெரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு மூலம் முதலீடுகளை ஈர்த்து வருகிறார்.

தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப்பெரும் சாதனையை சாதித்து, தமிழர்களின் எதிர்கால வாழ்வில் ஒளியேற்றி திராவிட இயக்க பேரொளியாக, இந்திய துணைக் கண்டத்தின் முதல்வர்களுக்கு முதன்மையானவராக திகழ்ந்து கழகத்திற்கு பெருமை சேர்க்கின்ற ஆற்றல்மிகு தலைவர் முதல்வர் தளபதியை இக்கூட்டம் போற்றி புகழ்ந்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

கழகத்தின் ஆக்கப்பணிகளாக தொடந்து மாவட்டம் முழுவதும் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டம், ஊராட்சி கிளை ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் உறுப்பினர் சேர்க்கை, இளைஞரணி, மகளிரணிகளிலும் தீவிரமாக உறுப்பினர் சேர்க்கைப்பணிகளில் நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களும் செயல்பட வேண்டும். 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் கருத்துப்படி 200 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றிபெற உழைப்போம். கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அய்ந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ளாட்சித் தேர்தல்களிலும் வெற்றிபெற்று தலைவர் கரத்தில் செயலாக்க திறன் மிக்க மாவட்டச் செயலாளர் - வேளாண்துறை உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் ஒப்படைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

திராவிடப் பேரியக்கத்தின் அரசியல் வடிவமான திராவிட முன்னேற்றக் கழகம், பேரறிஞர் அண்ணா அவர்களால் 1947ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்டு இன்று தமிழினத்தின் தலைநிகர் தலைவர் தளபதி அவர்களால் கொள்கைக்காத்திடும் சமூக நீதி இயக்கமாக 75வது ஆண்டினை கழகம் கண்டு உதயசூரியனாக ஒளிவீசி திகழ்கிறது. பவளவிழா காணும் கழகத்தில் உறுப்பினராக இருப்பதே பெருமைக்குறியதாகும். செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்தும் செப்டம்பர்17 தந்தை பெரியார் பிறந்த நாள், திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள். வரலாற்று பெருமைமிகும் அந்நாளில் கழக உடன்பிறப்புக்கள் ஒவ்வொருவருர் இல்லத்திலும் கழக கொடி ஏற்றிட தலைவர் தளபதி அவர்கள் அன்பு ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே நம் மாவட்டம் முழுவதும் இல்லம்தோறும் கொடியேற்றி மகிழ்வாக கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் எம்.இராஜகாந்தம், பெரம்பலூர் மாவட்டம், குன்னம் கிராமத்தில் கட்டியுள்ள புதிய இல்லத்தை திறந்து வைத்தார். மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய செயலாளர்கள் தி.மதியழகன், சி.ராஜேந்திரன் மற்றும் ராஜகாந்தம் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில், தமிழ்நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களுக்கு 2735 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழாவை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரி கூட்டரங்கில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மகளிர் சுய உதவிக்குழுக்கான வங்கி கடன் இணைப்பை பயனாளிகளுக்கு வழங்கினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்..மஸ்தான், மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர் இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் அ.சிவா, மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன்ஜெய் நாராயணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி, ஒன்றிய குழு தலைவர்கள் கோலியனூர் சச்சிதானந்தம், திருவெண்ணெய்நல்லூர் ஓம் சிவ சக்திவேல், காணை கலைச்செல்வி, வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப். 11-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வழிகாட்டுதலின் படி தருமபுரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடந்து முடிந்தது.

இதனைத் தொடர்ந்து தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் செப்டம்பர் 13ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அரூர், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள் (BLA - 2) மற்றும் பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் கழக முப்பெரும் விழா குறித்தும், 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்தும், கட்சி ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தி.மு.க. பவளவிழா – முப்பெரும் விழா

கரூர் மாவட்டக் கழகத்தினர் இல்லங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றுவீர்!

மாவட்டக் கழகம் வேண்டுகோள்!

கரூர்,செப்.11-

தி.மு.கழகத்தின் பவள விழா - செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கழகத் தோழர்கள் வீடுகளிலும் கழக கொடியை ஏற்றி பட்டொளி வீசிப் பறக்கச் செய்திடுவோம் என கரூர் மாவட்ட கழகம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கரூர் மாவட்டக் கழகம் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளால் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தி.மு.கழகம் பவள விழா நிறைவு பெறுகிறது. நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்து, சட்டங்களை உருவாக்கி, இன்று இந்தியாவை வழிநடத்தக்கூடிய வகையில், தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்று திகழ்கிறது என்றால், அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் - உதிரமாகவும் திகழ்கின்ற தி.மு.கழகத்திற்கே உரியது.

இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. எனும் பேரியக்கம், இந்த வரலாற்றுப் பெருமையில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் பங்கு அளப்பரியது.

75 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நிறைவு செய்த பேரியக்கம் வெற்றி - தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, “நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்” என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்து வருகிறது.

கழகத்தின் பவள விழா ஆண்டு கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் - 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்ற வேண்டும் என்றும்,

இந்த கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில்,

கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசச் செய்திட வேண்டும் என்று நமது நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் என நமது தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க,

கரூர் மாவட்டம், மாநகரம் பகுதி ஒன்றியம் - நகர - பகுதி - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் உள்ள அனைத்துக் கொடிக் கம்பங்களையும் வர்ணம் தீட்டி புதுப்பித்து வருகிற செப்டம்பர்-15 அண்ணா பிறந்த நாள் அன்று காலை 9.00 மணிக்கு அனைத்து கிளைகளிலும் கழக முன்னோடிகளை வைத்து, கழகக் கொடியை ஏற்றிடுவோம். ஒட்டு மொத்த கழக நிர்வாகிகள் செப்டம்பர் 15-ஆம் தேதி காலையிலேயே கழக கொடி ஏற்றி, கழக கொடி பட்டொளி வீசுவது பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்திட வேண்டும்.

“கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க.” நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில், கரூர் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, எம்எல்ஏ, ஆலோசனைப்படி கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழக கொடியை கம்பீரமாக ஏற்றி,

தி.மு.கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்று கழகத்தினர் அனைவரையும் இருகரம் கூப்பி கேட்டுக்கொள்வதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் – தலைவர் தளபதியார் அவர்களால் மாணவ –மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட கல்வி அலுவலர் அ.ரமேஷ், குன்றாண்டார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், ஒன்றியச் செயலாளர் ஓ.எஸ்.வெங்கடாசலம், மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம், கீரனூர் பேரூர் செயலாளர் ப.அண்ணாதுரை, கீரனூர் பேரூராட்சி துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், கீரனூர் பேரூராட்சி கவுன்சிலர் மகாலட்சுமி, அதாவுல்லா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு தலைவர் க.பத்மினி, துணை தலைவர் ஓ.ஆறுமுகம் மற்றும் தலைமை ஆசிரியர், இருபால் ஆசிரியப் பெருமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.